# ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
# தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
# DEPARTMENT OF NATIONAL BUDGET

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
பொதுத்திறைசேரி, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
General Treasury, Ministry of Finance and Mass Media, Colombo 01, Sri Lanka

**Web Site:** www.treasury.gov.lk **e-mail:** budget@nbd.treasury.gov.lk


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | BD/103/03/1616 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி.<br>Date | 2017.07.28 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலவர்கள் அனைவருக்கும்

**வரவு செலவுதிட்ட அழைப்பு – 2018 இற்கான மேலதிக பிற்சேர்க்கை-I**
**வரவு செலவுத்திட்ட வரைபு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்**

2017.07.25 ஆந் திகதிய BD/CBP/4/1/2018 ஆம் இலக்க எனது கடிதத்தின் மூலம் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பப்பட்ட வரவு செலவுத்திட்ட அழைப்பு – 2018 இற்கு மேலதிகமாக இப்பிற்சேர்க்கை வெளியிடப்படுகின்றது.

02. நீங்கள் அறிந்தது போன்று, பொதுத் திறைசேரியானது செலவின முகவராண்மைகளுக்கு வினைத்திறன்மிக்க பயன்வலுவான நிதி தீர்வைகளையும் தகவல்களை வழங்குவதற்கு ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினை (ITMIS) உருவாக்கியுள்ளது. இக்கருத்திட்டமானது சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் ஒத்துழைப்புடன் 2017 இன் முன்னோடி கருத்திட்டமாக செயற்படுத்தப்பட்டது.

03. தற்பொழுது இந்த மென்பொருள் முறைமையானது 2018 ஆம் ஆண்டுக்கான தரவுகளை உள்ளீடு செய்வதற்கு தயாராகவுள்ளது. இம்முறைமையின் வரவு செலவுத்திட்ட மொடியூலானது அனைத்து செலவின முகவர்களாலும் பயன்படுத்த தயாராக காணப்படுகின்றது. எவ்வாறாயினும் வரவு செலவுத்திட்ட திணைக்களமானது BFS மற்றும் ITMIS முறைமைகள் இரண்டினையும் குறிப்பாக இவ்வருடத்தில் செயற்படுத்தும் அதேவேளை BFS இன் செயற்பாடுகள் 2018 இன் இறுதியில் நிறுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

04. எனவே, வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு ஆவணங்களை அனுப்புகின்ற அதேவேளை 2018 இற்கான வரவு செலவுத்திட்ட தரவுகளை புதிய ஒன்லைன் முறைமை மூலம் நேரடியாக பதிவேற்றம் செய்வது கட்டாயமானதாகும். வரவு செலவுத்திட்ட திட்டமிடல், வரவு செலவுத்திட்ட நிறைவேற்றல் மற்றும் அறிக்கையிடலுக்கு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் பயன்படுத்தப்படவுள்ள ITMIS செயற்றிட்டம் மாத்திரமே பயன்படுத்தப்படவுள்ளது. இம்முறைமையானது வங்கி அல்லது நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களுக்கு எதிர்காலத்தில் நேரடியாக கொடுப்பனவுகளை விடுவித்தல் போன்ற புதிய வசதிகளை வழங்கும். இது மேலதிக வரவு செலவுத்திட்ட கோரிக்கைகளை ஒன்லைன் மூலம் மேற்கொள்வது வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு மற்றும் வரையறை என்பவற்றுக்கு இது மேலும் உதவியாக இருக்கும். வரவு செலவுத்திட்ட திட்டமிடல், வரவு செலவுத்திட்ட நிறைவேற்றல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான கணக்கீட்டு குறியீட்டு வரைபொன்றினை பின்பற்றி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் நாயகம்<br>Director General | 0094-11-2484665<br>0094-11-2484639 (Fax) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | 0094-11-2484669<br>0094-11-2484853 | ෆැක්ස් අංකය<br>தொலைநகல் இல<br>Fax No. | 0094-11-2484807 |

05. வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் மத்தியதர அலுவலகங்களில் வரவு செலவுத்திட்ட தயாரிப்பிற்கு வசதியளிக்கும் வகையில் செலவின அலகுகளில் தயாரிக்கப்படுவதுடன் உரப்பட்ட உண்மையான கொடுக்கல் வாங்கல் மீதான வரவு செலவுத்திட்ட வரையறையினை தாபிப்பதும் ITMIS முறைமையில் அடங்கும். இச்செயன்முறையினை துரிதப்படுத்துவதற்கு, திணைக்களங்களின் அனைத்து தலைவர்கள் அனைவரும் செலவின அலகு மட்டத்தில் ITMIS இனால் ஏற்கனவே பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்களை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் 2017.07.28 ஆந் திகதியளவில் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு கிடைக்குமாறு விபரங்களையும் கையடக்க தொலைபேசி இலக்கங்களையும் அனுப்பி வைத்தல் வேண்டும். செலவின முகவராண்மைகள், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் ITMIS என்பவற்றுக்கிடையிலான தொடர்பாடல்களை இந்த அலுவலர்களுக்கிடையில் பரிமாறிக் கொள்வதற்கான தேவையான கடவுச் சொற்கள் மற்றும் மின்னஞ்சல் என்பன வழங்கப்படும்.

06. வரவு செலவுத் திட்டமிடலுக்காக ITMIS செயல்முறையினை வெற்றிகரமாகவும் உரிய காலத்திலும் பயன்படுத்துவதற்கு வரவு செலவுத்திட்ட திட்டமிடலுக்கு ITMIS இணை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக அலுவலர்கள் ஏற்கனவே பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். 2017 மே மாதம் 8 மற்றும் 26 ஆந் திகதிகளில் செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. செயலமர்வுகளில் பங்குபற்றாதவர்களுக்கு மற்றுமொரு செயலமர்வு ஏற்பாடு செய்யப்படும். ஆகஸ்ற் மாதத்தின்போது நியமிக்கப்பட்ட பயன்படுத்துநர்கள் புதிய கணக்கீட்டு வரைபு மற்றும் வரவு செலவுத்திட்ட திட்டமிடல் மொடியூல்ஸ் தொடர்பான பயிற்சி வழங்கப்படுவதுடன் அதன் மூலம் 2018 இற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை ITMIS முறைமையின் மூலம் பதிவேற்றம் செய்ய முடியும். எனவே, ITMIS வரவு செலவுத்திட்ட திட்டமிடல் மொடியூல் தொடர்பான பயிற்சி தேவையுடைய அலுவலர்களை 2017.08.04 ஆந் திகதியளவில் நியமிப்பதுடன் அவர்களது விபரங்களை info@fmepsl.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். திணைக்களம்/அமைச்சின் கணக்கீட்டு தலைப்பு இல, திணைக்கள /அமைச்சின் பெயர் மற்றும் திரு/திருமதி போன்ற தகவல்கள், முதற் பெயர், இறுதிப் பெயர், முன்னெழுத்துக்களுடன் பெயர், பதவி, தொடர்பு இல, அடையாள அட்டை இல, பிறந்த திகதி, மின்னஞ்சல் மற்றும் பயிற்சி பெற விரும்பும் மொழி போன்ற விபரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இப்புதிய முறைமையினை செயற்படுத்துவதற்கு நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது.

**ஒப்பம்/கே.டி.எஸ்.ருவன்சந்ர**
**பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. பணிப்பாளர், அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் கருத்திட்டம்